

இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 348 – திருவள்ளுவர் ஆண்டு 2057 – ஆடி 13 – புதன்கிழமை 29 ஜுலை 2026 – மதுரை 8 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 84 - Issue 348 : Thiruvalluvar Year - 2057 - Aadi 13 - Wednesday 29 July 2026 - Madurai 8 Pages ₹ 5.00


### ஜோதிடர் ஆலோசனைப்படி

## முதலமைச்சர் அலுவலகத்தை இடமாற்றுவதா?

### தலைமைச் செயலகச் சங்கம் எதிர்ப்பு!

சென்னை, ஜுலை 29-

சென்னை தலைமைச் செயலக வளாகத்தில் புனித ஜார்ஜ் கோட்டையின், பழைய கட்டடத்தின் முதல் தளத்தில், முதல்வர் அலுவலகம் அமைந்துள்ளது. இதுவரை முதலமைச்சராக பதவி வகித்த அனைவருமே அந்த அறையில் அமர்ந்து தான் அலுவல்களை கவனித்தனர்.

இந்நிலையில் விஜய் முதல்வராக பொறுப்பேற்றதும், அவரது ஜோதிடர் அளித்த ஆலோசனையின் பேரில் அலுவலகத்தை இடமாற்றம் செய்ய முடிவு செய்யப்பட்டது. வாஸ்து சாஸ்திர முறைப்படி தலைமைச் செயலத்தில் உள்ள நாமக்கல் கவிஞர் மாளிகையின் 10வது தளத்திற்கு முதலமைச்சர் அறையை மாற்றுவதற்கு அரசாணை வெளியிடப்பட்டு அங்கு முதலமைச்சர் அலுவலகம் அமைக்கும் பணி தொடங்கியுள்ளது.

இதையடுத்து இதுவரை அங்கு செயல்பட்டு வந்த தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை கலைவாணர் அரங்கத்திற்கு இடம் பெயர்கின்றன. த.வெ.க. அரசின் இந்த நடவடிக்கைக்கு தலைமைச் செயலகச் சங்கம் எதிர்ப்புத் தெரிவித்துள்ளது.

வணிகவரி, பதிவு மற்றும் அறநிலையத் துறையின் கூட்ட அரங்கங்களையும் உணவறைகளையும் இடமாற்றம் செய்வது என்பது ஏற்புடையதல்ல என்றும் பணியாளர்கள் பணியாற்றுவதற்கு தேவையான இடவசதி இருக்காது என்பதோடு கோப்புகளை வைப்பதற்கும் பராமரிப்பதற்கும் போதுமான இடமே இருக்காது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்தி மற்றும் விளம்பரத்தின் நிர்வாகத் துறையானது தலைமைச் செயலகத்தில் செயல்பட வேண்டுமேயன்றி, இயக்கத்தின் கட்டுப்பாட்டில் செயல்படுவது என்பது ஏற்புடையதல்ல என தலைமைச் செயலகச் சங்கம் எதிர்ப்பு தெரிவித்துள்ளது.

### பட வசூல் பாதிக்கும் என்ற பயத்தால் – மேகதாது பிரச்சினையில்

# தமிழ்நாட்டின் உரிமையை முதல்வர் அடகு வைப்பதா?

## உடனே நடவடிக்கை எடுக்க – சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் வலியுறுத்தல்!

**சென்னை, ஜுலை 29-**

**“பட வசூல் பாதிக்கும் என்ற பயத்தால் மேகதாது பிரச்சினையில் தமிழ்நாட்டின் உரிமையை முதல்வர் அடகு வைப்பதா?” என்று சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்.**

ஒன்றிய நீர்வளத்துறை இணையமைச்சர் ராஜ் பூஷன், “காவிரி நதியின் குறுக்கே எந்தவிதமான கட்டுமானத்தையும் மேற்கொள்வதற்காக கர்நாடகா அரசு தமிழ்நாடு, கேரளா மற்றும் புதுச்சேரியின் ஒப்புதலை பெற வேண்டும் என்று 2018ஆம் ஆண்டு உச்ச நீதிமன்ற தீர்ப்பில் எங்கும் குறிப்பிடப்படவில்லை.

குறிப்பாக கடந்த 2018ஆம் ஆண்டு பிப்ரவரி 16ஆம் தேதி உச்ச நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பில், காவிரி தீர்ப்பாயத்தின் 2007 தீர்ப்பின் பிரிவு 18ஐ உறுதிப்படுத்தி உள்ளது. தீர்ப்பாயத்தின் உத்தரவுக்கு முரணாக இல்லாத வகையில், மாநில எல்லைகளுக்குள் நீரைப் பயன்படுத்தவும், அதன் பயனை அனுபவிக்கவும் ஒவ்வொரு மாநிலத்துக்கும் அதிகாரம் உள்ளது என வலியுறுத்தியுள்ளது.

மேகதாது அணை மற்றும் குடிநீர் திட்டம் தொடர்பாக, கர்நாடகா 2019ம் ஆண்டு சமர்ப்பித்த விரிவான திட்ட அறிக்கையை, காவிரி தீர்ப்பாயத்தின் உத்தரவு மற்றும் மத்திய நீர்வள ஆணையத்தின் வழிகாட்டுதல்களுக்கு ஏற்ப திருத்தம் செய்து மீண்டும் சமர்ப்பிக்குமாறு திட்ட அதிகாரிகளுக்கு திருப்பி அனுப்பப்பட்டுள்ளது” என்று தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் இதுகுறித்து சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டிருப்பதாவது :-



**மேகதாது அணை கட்ட தமிழ்நாட்டின் அனுமதி கர்நாடகாவிற்குத் தேவை இல்லை என்ற ஒன்றிய இணை அமைச்சரின் பதில் காவிரி விவகாரத்தில் தமிழ்நாட்டின் உரிமையை கேள்விக்குறியாக்கி இருக்கிறது.**

**டெல்லி எஜமானர்களை பகைத்துக் கொள்ளாமலும் ஆட்சிக்கட்டிலைக் காப்பாற்ற காங்கிரஸுக்கு எதிராக பேசாமலும், தமிழ்நாட்டின் உரிமையை அடகு வைத்துள்ளார் முதலமைச்சர்.**

**இந்தப் பிரச்சினையில், தமிழ்நாட்டு அரசியல் கட்சிகள் ஓரணியில் சென்று ஒன்றிய அரசிடம் மேகதாதுவுக்கு எதிராக குரல் கொடுக்க வேண்டுமென சட்டப்பேரவையில் பேசி இருந்தேன்.**

**கர்நாடகாவில் பட வசூல் பாதிக்கும் என்ற பயத்தில், இந்த #SofaModel முதலமைச்சர், எதிர்க்கட்சிகள் சொன்னதையும் கேட்கவில்லை, விவசாயிகளின் கோரிக்கையையும் ஏற்கவில்லை.**

**இனியும் காலம் தாழ்த்தினால் தமிழ்நாட்டு விவசாயிகளின் வாழ்வாதாரம் முற்றிலும் பறிபோகும்.**

**எனவே, மேகதாதுவில் அணை கட்டும் முயற்சியை முறியடிக்க முதலமைச்சர் உடனடி நடவடிக்கை எடுக்க வேண்டும்.**

இவ்வாறு உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தமது முகநூலில் பதிவிட்டுள்ளார்.

### மேகதாது பிரச்சினை: த.வெ.க. அரசைக் கண்டித்து

# தஞ்சையில் நாளை மாபெரும் ஆர்ப்பாட்டம்!

## டெல்டா மாவட்டக் கழகங்கள் சார்பில் முன்னாள் அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நடைபெறுகிறது!

தஞ்சை, ஜுலை 29-

தஞ்சை மத்திய மாவட்டச் செயலாளர் துரை சந்திரசேகரன், தஞ்சை வடக்கு மாவட்டப் பொறுப்பாளர் சாக்கோட்டை க.அன்பழகன், தஞ்சை தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டி.பழனிவேல் ஆகியோர் விடுத்துள்ள வேண்டுகோள் வருமாறு:-



விவசாயக் கடன் முழுமையாகத் தள்ளுபடி செய்ய வேண்டியும் மேகதாது அணை கட்டுவதை தடுக்கத் தவறிய த.வெ.க. அரசை கண்டித்தும் டெல்டா மாவட்டங்களை வறட்சி மாவட்டங்களாக அறிவிக்க வேண்டியும் தஞ்சை வடக்கு, மத்திய, தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நாளை (30.7.2026 - வியாழக்கிழமை) காலை 10 மணி அளவில் தஞ்சாவூர் பனகல் கட்டிடம், ஜுபிடர் தியேட்டர் அருகில் நடைபெறுகிறது.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு கழக முதன்மைச் செயலாளரும் சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவருமான கே.என்.நேரு தலைமை வகிக்கிறார்.

இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில், கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் எஸ்.எஸ். பழனிமாணிக்கம், எஸ்.கல்யாணசுந்தரம் எம்.பி., முன்னாள் அமைச்சர்கள் எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ., எஸ்.ரகுபதி எம்.எல்.ஏ., அன்பில் மகேஷ் பொய்யாமொழி, கோவி.செழியன் எம்.எல்.ஏ., டி.ஆர்.பி.ராஜா ஆர்.வைத்தியலிங்கம் எம்.எல்.ஏ., முன்னாள் எம்.பி.செ.ராமலிங்கம், முன்னாள் அமைச்சர்கள் எஸ்.எஸ். சிவசங்கர் எம்.எல்.ஏ., சிவ வீ. மெய்யநாதன் எம்.எல்.ஏ., சி.வி. கணேசன் எம்.எல்.ஏ., கழக விவசாய அணி செயலாளர் ஏ.கே.எஸ். விஜயன், கழக விவசாயத் தொழிலாளர் அணி செயலாளர் அன்னியூர் சிவா, கழக விவசாயத் தொழிலாளர் அணி தலைவர் உ.மதிவாணன், எஸ்.ஜித்து, ச.முரசொலி எம்.பி., கே.என்.அருண் நேரு எம்.பி. ஆகியோர் கண்டன உரை நிகழ்த்துகின்றனர்.

மேலும் இக்கண்டன ஆர்ப்பாட்டத்தில் பூண்டி கே.கலைவாணன், காடுவெட்டி ந.தியாகராஜன், க.வைரமணி, நிவேதா எம்.முருகன், என்.கௌதமன், எஸ்.செல்லபாண்டியன், கா.அண்ணாதுரை, என்.அசோக்குமார், ஏனாதி ப.பாலசுப்பிரமணியன், எம்.ரெங்கசாமி, து.செல்வம், எம்.இராமச்சந்திரன், டி.கே.ஜி. நீலமேகம், கே.டி.மகேஷ்கிருஷ்ணசாமி, சி.இறைவன், த.காரல்மார்க்ஸ், குட்டி இரா. தெட்சிணாமூர்த்தி, சண்.இராமநாதன், அஞ்சுகம் பூபதி, சு.ப.தமிழாகன், ஆடுதுறை மு.உத்திராபதி, இராம.விஜயன், பழஞ்சூர் கே.செல்வம், வீ.ஜெய பிரகாஷ், கார்த்திகேயன் வேலுச்சாமி உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்று கண்டன முழக்கமிடுகின்றனர்.

எனவே இந்தக் கண்டன ஆர்ப்பாட்டத்தில் ஒருங்கிணைந்த தஞ்சை மாவட்டக் கழக நிர்வாகிகள், தோழர்கள் அனைவரும் கலந்து கொள்ளும்படி மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன், மாவட்டப் பொறுப்பாளர்கள் சாக்கோட்டை க.அன்பழகன், டி.பழனிவேல் ஆகியோர் கேட்டுக் கொண்டுள்ளனர்.


### மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில்

## மிதமான மழைக்கு வாய்ப்பு!

### சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல்!

சென்னை, ஜுலை 29-

மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் அடுத்த 2 நாட்கள் மிதமான மழைக்கு வாய்ப்புள்ளது என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தகவல் தெரிவித்துள்ளது.



நீலகிரி மாவட்டத்தில் நாளை முதல் 3 நாட்களுக்கு கனமழை பெய்ய வாய்ப்புள்ளது.

ஜுலை 31, ஆக. 1 இல் கோவை, தேனி மாவட்டங்களில் கனமழை பெய்யக்கூடும் என சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

